THE NEW INDIAN EXPRESS

FIRST RESPONDERS INITIATIVE

# Jipmer hosts emergency care event

EXPRESS NEWS SERVICE
@ Puducherry

A comprehensive first responder training programme was recently held in Puducherry as part of the INDIA-EMS project, an initiative under the National Health Research Priority (NHRP) of the Indian Council of Medical Research (ICMR). The programme, aimed at building grassroots-level emergency care capacity, was implemented by JIPMER, the national nodal centre for INDIA-EMS, in collaboration with the Directorate of Health and Family Welfare Services and the Pondicherry district administration.

The training forms a key part of the "One Responder, One Village" initiative, which envisions preparing at least one person in every village to respond effectively to medical emergencies and disasters. The goal is to improve golden-hour outcomes and establish a responsive emergency system anchored in the community. Inaugurating the program, Puducherry Collector A Kulothungan, emphasised the importance of empowering local citizens to manage emergencies, including road accidents and mass casualty situations. He commended the synergy between JIPMER, INDIA-EMS, and the Health Department in creating a sustainable emergency preparedness framework.

இந்து தமிழ் திசை

## புதுச்சேரியில் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் சார்பில்

# 'ஒரு பதிலளிப்பவர், ஒரு கிராமம் பயிற்சி திட்டம்'

■ புதுச்சேரி

புதுச்சேரியில் 'ஒரு பதிலளிப்பவர், ஒரு கிராமம்' என்ற பயிற்சி திட்டம் நேற்று புதுச்சேரியில் தொடங்கப் பட்டது.

இத்திட்டம் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் தேசிய சுகாதார ஆராய்ச்சி முன்னுரிமை முயற்சியான ஒருங்கிணைந்த மாவட்ட அடிப்படையிலான அவசர மாதிரி அமைப்புக்கான செயல்படுத்தல் ஆராய்ச்சி திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்திட்டம் புதுச்சேரி மாவட்ட நிர்வாகம், சுகாதாரம் மற்றும் குடும்ப நல சேவைகள் இயக்குநரகம் மற்றும் ஜிப்மரின் அதிர்ச்சி மற்றும் தீக்காயங்களுக்கான சிறப்பு மையம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியின் மூலம் செயல்படுத்தப் படுகிறது.

இதனை புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசும்போது, பேரிடர் மற்றும் பெருமளவிலான உயிரிழப்பு சம்பவங்களின் போது பயிற்சி பெற்ற முதல் பதிலளிப்பவர்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். இதில் மிஷன் இயக்குநர் கோவிந்தராஜன், துணை இயக்குநர் ரகுநாதன், 108 நோடல் அதிகாரி துரைசாமி, திட்டத் தலைவர் மனு அய்யன் மற்றும் ஒருங்கிணைப்பாளர் சூரியபிரசன்னன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
9.7.2025 (புதன்கிழமை)




முதலுதவி சிகிச்சை பயிற்சியை தொடங்கி வைத்து கலெக்டர் குலோத்துங்கன் பேசியபோது எடுத்த படம்.

### பேரிடர் காலங்களில்

# முதலுதவி சிகிச்சை குறித்து தன்னார்வலர்களுக்கு பயிற்சி

## கலெக்டர் குலோத்துங்கன் தொடங்கி வைத்தார்

புதுச்சேரி, ஜூலை.9-

பேரிடர் காலங்களில் முதலுதவி சிகிச்சை அளிப்பது குறித்து தன்னார்வலர்களுக்கான பயிற்சியை கலெக்டர் குலோத்துங்கன் தொடங்கி வைத்தார்.

### தன்னார்வலர்களுக்கு பயிற்சி

பேரிடர் காலங்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்க தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 'ஒரு மீட்பாளர் ஒரு கிராமம்' என்ற பெயரிலான இந்த திட்டம் புதுச்சேரி சுகாதாரத்துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் ஜிப்மரின் அதிர்ச்சி மற்றும் தீக்காயங்களுக்கான சிறப்பு மையம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

தன்னார்வலர்களுக்கான பயிற்சி திட்டம் தொடர்பான கூட்டம் புதுவை கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்தை கலெக்டர் குலோத்துங்கன் தொடங்கி வைத்து பேசும்போது, புயல், வெள்ளம் போன்ற பேரிடர் காலத்தின் போது பயிற்சி பெற்ற மீட்பாளர்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். அவசர காலங்களில் உயிரிழப்பை குறைப்பதற்கு சமூக அளவிலான திறனை வளர்ப்பது முக்கியம் என்றார்.

### பாதுகாப்பான போக்குவரத்து

இந்த பயிற்சி முகாமில் மூச்சு திணறல், அதிர்ச்சி, ரத்தப்போக்கு கட்டுப்படுத்துதல் மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து நுட்பங்கள் ஆகியவை குறித்து தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

முகாமில் தேசிய கிராமப்புற சுகாதார இயக்குனர் கோவிந்தராஜன், சுகாதாரத்துறை துணை இயக்குனர் ரகுநாதன், 108 ஆம்புலன்ஸ் பொறுப்பு அதிகாரி டாக்டர் துரைசாமி, திட்டத் தலைவர் டாக்டர் மனு அய்யன், ஐ.சி.எம்.ஆர். விஞ்ஞானி சூரிய பிரசன்னன் மற்றும் தன்னார்வலர்கள் கலந்துகொண்டனர்.

தினகரன்
ஜூலை 9, 2025 புதன்கிழமை

### அவசர காலங்களில் உயிரிழப்பை தடுக்க

# ஒரு கிராமம், ஒரு முதலுதவி செய்பவர் திட்டம் துவக்கம்




புதுச்சேரியில் ஒரு கிராமம், ஒரு முதலுதவி செய்பவர் என்ற திட்டத்தின் கீழ் பயிற்சியை மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் துவக்கி வைத்தார்.

புதுச்சேரி, ஜூலை 9: புதுச்சேரியில், ஒரு கிராமம், ஒரு முதலுதவி செய்பவர் என்ற திட்டத்தின் கீழ் பயிற்சி திட்டம் நேற்று துவங்கப்பட்டுள்ளது. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், தேசிய சுகாதார ஆராய்ச்சி முன்னுரிமை சார்பில் மாவட்ட அளவில் அவசர காலங்களில் மக்களை காப்பதற்கான முன் மாதிரிகளை செயல்படுத்துவதே நோக்கமாகும். புதுச்சேரி மாவட்ட நிர்வாகம், சுகாதாரத்துறை, ஜிப்மர் இணைந்து அதிர்ச்சி மற்றும் தீக்காயங்களுக்கான சிறப்பு மையத்தினை செயல்படுத்துகிறது. இதனை மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் துவக்கி வைத்து பேசுகையில், பேரிடர்கள் மற்றும் பெரும் உயிரிழப்பு சம்பவங்களின் போது பயிற்சி பெற்ற முதலுதவி செய்பவர் மிக முக்கியமான தனது பங்களிப்பை செய்கிறார். இது அவசரகாலங்களில் உயிர் இழப்பை பெருமளவு குறைக்கிறது. இத்திறனை வளர்த்து கொள்ளுதல் அவசியமாகும். சமூகம் சார்ந்த பயிற்சியை துவங்குவதில் சுகாதாரம் மற்றும் குடும்ப நல இயக்குநரகம், இந்தியா-இ.எம்.எஸ். மற்றும் ஜிப்மர் ஆகியவற்றுக்கு இடையேயான ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு மிகவும் பாராட்டுக்குரியது என்றார்.

உள்ளூர் மக்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு உயிர்காக்கும் திறன்களை மேம்படுத்துவதன் அவசியத்தை தேசிய சுகாதார இயக்ககம் இயக்குநர் கோவிந்தராஜன் வலியுறுத்தினார். சுகாதாரத் துறை துணை இயக்குநர் ரகுநாதன், 108 நோடல் அதிகாரி டாக்டர் துரைசாமி, திட்டத் தலைவர் டாக்டர் மனு அய்யன் மற்றும் இந்தியா-இஎம்எஸ், ஐசிஎம்ஆர், விஞ்ஞானி டாக்டர். சூரியபிரசன்னன் ஆகியோர் உரையாற்றினர். மருத்துவமனைக்கு வருவதற்கு முன் உயிர் காக்கும் நடவடிக்கை எடுக்கக்கூடிய ஒவ்வொரு கிராமத்திலும் முதலுதவி அளிப்பவர், ஒரு கிராமம் என்ற பயிற்சி பெற்றவரை உருவாக்கும் நோக்கம் குறித்து அனைவரும் தங்களது கருத்துகளை தெரிவித்தனர்.

தினமணி

# உயிரிழப்பைக் குறைக்க சமூகத் திறனை வளர்ப்பது முக்கியம்

புதுச்சேரி, ஜூலை 8: அவசர காலங்களில் உயிரிழப்பைக் குறைக்கச் சமூக அளவிலான திறனை வளர்ப்பது மிக முக்கியம் என்று புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் அ. குலோத்துங்கன் தெரிவித்தார்(படம்).

'ஒரு பதிலளிப்பவர், ஒரு கிராமம்' என்ற முன் முயற்சியின் கீழ் முதல் பதிலளிப்பவர் பயிற்சி திட்டம் புதுச்சேரியில் செவ்வாய்க்கிழமை தொடங்கப்பட்டது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் தேசிய சுகாதார ஆராய்ச்சி முன்னுரிமை முயற்சியான ஒருங்கிணைந்த நாடு தழுவிய மாவட்ட அடிப்படையிலான அவசர மாதிரி அமைப்புக்கான செயல்படுத்தல் ஆராய்ச்சி திட்டத்தின் ஒரு பகுதியாக இத் திட்டம் உள்ளது. புதுச்சேரி மாவட்ட நிர்வாகம், சுகாதாரம் மற்றும் குடும்ப நல சேவைகள் இயக்குநரகம், ஜிப்மரின் அதிர்ச்சி மற்றும் தீக்காயங்களுக்கான சிறப்பு மையம் ஆகியவற்றின் கூட்டு முயற்சி மூலம் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதனை புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் அ. குலோத்துங்கன் ஆட்சியர் அலுவலக மாநாட்டு அரங்கில் தொடங்கி வைத்துப் பேசியது: பேரிடர்கள் மற்றும் பெருமளவிலான உயிரிழப்பு சம்பவங்களின்

புதுச்சேரி மாவட்ட ஆட்சியர்




போது பயிற்சி பெற்ற முதல் பதிலளிப்பவர்களின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். அவசர காலங்களில் உயிர் இழப்பைக் குறைப்பதற்குச் சமூக அளவிலான திறனை வளர்ப்பது மிக முக்கியம். முக்கியமான சமூகம் சார்ந்த பயிற்சியைத் தொடங்குவதில் சுகாதாரம் மற்றும் குடும்ப நல சேவைகள் இயக்குநரகம், இந்தியா-இ.எம்.எஸ். மற்றும் ஜிப்மர் ஆகியவற்றுக்கு இடையேயான ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு பாராட்டத்தக்கது என்றார்.

உள்ளூர் குடிமக்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு உயிர்காக்கும் திறன்களை மேம்படுத்துவதன் அவசியத்தை தேசிய சுகாதார மிஷன் இயக்குநர் டாக்டர் எஸ். கோவிந்தராஜன் வலியுறுத்தினார். அவசர சிகிச்சையைக் குறிப்பாக கிராமப்புற மற்றும் வளங்கள் குறைவாக உள்ள பகுதிகளில், பரவலாக்குவதில் இந்த முயற்சி சரியான நேரத்தில் மற்றும் அவசியமானதாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாள் முழுவதும் நடைபெற்ற இந்த அமர்வில், மூச்சுத் திணறல் நிவாரணம், அதிர்ச்சி எதிர்வினை, ரத்தப் போக்கு கட்டுப்பாடு, கர்ப்பப்பை வாய், முதுகெலும்பு நிலைப்படுத்தல் மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து நுட்பங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டது.

துணை இயக்குநர் மருத்துவர் ஜி. ரகுநாதன், 108 நோடல் அதிகாரி மருத்துவர் ஆர். துரைசாமி, திட்டத் தலைவர் மருத்துவர் மனு அய்யன் மற்றும் இந்தியா-இஎம்எஸ், ஐசிஎம்ஆர் விஞ்ஞானி மற்றும் பட்டறை ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் சூரியபிரசன்னன் ஆகியோர் பேசினர். நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.